இணைப்பு I.

[25 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசாணை (பல்) எண் 333, கல்வி, நாள் 14—2—1977 பத்தி 4-ல் அனைத்து மேலாண்மைகளிலும் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பல்வகைப்பட்ட இதர வகை ஆசிரியர்களுக்கு, தேர்வுநிலை வழங்கப்படும்போது, அனைத்து மேலாண்மைகளிலும் பணிபுரிந்த அவர்களின் முந்தைய பள்ளிகளின் பணியாற்றிய பணிக்காலத்தினை கணக்கிலெடுத்து, 10 ஆண்டு பணிக்காலம் நிர்ணயிக்கலாம் என அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. இப்பணிக்காலம் கணக்கிடப்படும் போது, ஆசிரியர்களின் பணி இடை முறிவுக் காலமிருப்பின் (break of service) இவைகளை தவிர்த்து, கணக்கிடப்பட வேண்டும் எனவும் அரசாணையில் அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

அரசாணை (பல்வகை) எண் 1050, நிதி (ஊதியக் குழு), நாள் 5—10—1978 பத்தி 61 (டி)-ல் 1—10—1978 ஆம் நாள் முதல் புதிய முறையில் தேர்வு/ சிறப்புத் தேர்வு நிலை அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இதற்கு முன் தேர்வு நிலை அனுமதிக்க வழங்கப்பட்ட அரசாணைகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை (பல்) எண் 1050, நாள் 5—10—1978-ஐ தொடர்பு படுத்தி, அரசாணை (பல்வகை) எண் 214, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 1—3—1979-ல் தேர்வு நிலைக்கு 10 ஆண்டுப் பணிக்காலம் கணக்கிடும்போது, பணியாளர் முறைப்படுத்தப்பட்ட பணிநாள் முதல் (regular appointment) கணக்கிடப்பட வேண்டும் எனவும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட காரணங் களுக்காக ஒரு பள்ளியிலிருந்து பிறிதொரு பள்ளிக்கு சென்றால், மேற்குறித்த ஆணைகளின்படி, அவர்களின் பணிக்காலம் புதிய பள்ளியில் சேர்ந்த நாள் முதலே கணக்கிலெடுக்கப்படும். இதனால் அவ்வாசிரியர்களின் தேர்வுநிலைக் காலத்தினைக் கணக்கிடும்போது பாதிப்புண்டாகும். ஆதலின் ஆசிரியர்களின் 10 ஆண்டு பணிக்காலத்தினை தேர்வு நிலைக்குக் கணக்கிலெடுக்கும்போது அவர்களின் அனைத்துப் பள்ளிகளின் பணிக்காலத்தினையும் பணியிடை முறிவு காலத்தைத் தவிர்த்து தகுதி வாய்ந்த (Qualifying Service) பணிக்கால மாகக் கணக்கிலெடுக்க வேண்டும் என்னும் பள்ளிக் கல்வி இயக்குநரது கருத் துருவின்மீது ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அதனடிப்படையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள ஆசிரியர்களது பிரச்னைகள் தீர்க்கப் பட்டுவிடும்.